**கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்திட்டம் - 2019**

---

கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்திட்டத்தின் 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திக்கன ஒபெக் நிதிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஜுன் 10 ஆம் திகதிய 15111 பிபீ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கொழும்பைச் சூழவுள்ள 13 பிரதான தேசிய வீதிகளின் 65.45 கிலோமீற்றர்களை தரமுயர்த்துதல் மற்றும் நாரஹம்பிட்டிய – நுகெகொட வீதியின் மீள் நிர்மானம் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,347.37 மில்லியனுக்குச் சமமான 94.99 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் ரூபா 6,499.57 மில்லியனுக்குச் சமமான 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சர்வதேச அபிவிருத்திக்கன ஒபெக் நிதியினால் வழங்க உடன்பட்டிருந்தது. மீதித் தொகை ரூபா 5,847.80 மில்லியனுக்குச் சமமான 44.99 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 திசெம்பர் 11 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2020 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மொத்தமாக ரூபா 799.91 மில்லியன் 2019 ஆம் ஆண்டிற்காக ஒபிஇசி(OPEC) நிதியினால் செயற்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தும், மொத்தமாக ரூபா 285.57 மில்லியன் மாத்திரமே ஒரு கடனாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் மிகுதித்தொகை ரூபா 514.34 மில்லியன் பிழையாக மீளப்பெறத்தக்க வெளிநாட்டு உதவியாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகையில் பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்த கடன் தொகை ரூபா 514.34 மில்லியனால் குறைத்துக்காட்டப்ப்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்திற்கான மொத்த பெறுவனவுகள் ரூபா 799,914,345.23 ஆகும் ஆனால் பொதுக்கணக்குகள் திணைக்களம் இவ் ஆண்டிற்காக ரூபா 285,575,146.53 தொகையினை மாத்திரமே கணக்கிட்டிருந்தது. எனவே, நிதி நிலமைக்கூற்றில், செயற்திட்டம் ரூபா 285,575,146.53 இனை ஒரு மீளப்பெறப்பட்ட கடன் தொகையாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் மிகுதித்தொகை ரூபா 514,339,198.70 2019 ஆம் ஆண்டிற்கான பெறவேண்டிய வெளிநாட்டு உதவியாக கணக்கிடப்பட்டிருந்தது. | மொத்த கட்டணங்கள் மற்றும் கடன் தொகையினை நிதிக்கூற்றுக்களில் சரியாக பிரதிநிதித்துவப்படுத்த முறையான ஆவணங்களை செயற்திட்டமானது பராமரிக்க வேண்டும். |
| (ஆ) | ஜுன் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதி, கோட்டை - தளகலை வீதி மற்றும் கோட்டே – போப்பே வீதிக்கான முறையே 09,32 மற்றும் 35 ஆம் இலக்க இடைக்கால கொடுப்பனவு பத்திரத்துடன் தொடர்புபட்டு செலுத்த வேண்டிய இடைக்கால கொடுப்பனவு ரூபா 60 மில்லியன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை வேலை மற்றும் நடைமுறை பொறுப்பு கணக்கு குறைத்து காட்டப்பட்டிருந்தது. | சொல்லப்பட்ட ஒருகொடவத்த - அம்பத்தல வீதி, கொட்டாவ – தளகல வீதி மற்றும் கோட்டே – போப்பே வீதிக்கான இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதன் பின்னரே பிஎம்யு விற்கு கிடைக்கப்பெற்றது. எனவே மேற்கூறிய ஐபீசிக்கள் 2020 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டுள்ளது. | அறிக்கையிடல் திகதியிலான சரியான நிதி நிலைமை கூற்றினைக்காட்ட சரியான கணக்கீட்டு கொள்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கோட்டே - தலகல வீதி, கோட்டே- போப்பே வீதி, எவல்கம - டியகம வீதி மற்றும் மஹரகம - பிலியந்தல வீதி போன்றவற்றிற்கான சட்டரீதியான இழப்பீடு ரூபா 2,242 மில்லியனை செலுத்துவதில் தாமதத்துடன் தொடர்புபட்ட அண்ணளவாக ரூபா 569 மில்லியன் செலுத்த வேண்டிய வட்டி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | இழப்பீட்டு தொகையில் குறை மதிப்பீடு. | செலுத்தப்பட்ட இழப்பீட்டு கொடுப்பனவிற்கான வட்டியினை 2020 ஆம் ஆண்டு நிதிக்கூற்றில் செலுத்த வேண்டியதாக காட்ட கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த கணக்கீட்டு நியமங்கள் சரியாக அமுல்படுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| இல | கூறுகள் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயங்கள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதிக செயலாற்றல | அடையப்பெற்ற செயலாற்றல் | | | | |
| (அ) | கொட்டாவ – தலகள வீதி | 85.6% | 54.53% | உண்மை செயலாற்றல் திட்டமிட்ட செயலாற்றலிற்கு சற்று பின்னால் காணப்பட்டது. | தாமதங்களுடன் வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கும் சாத்தியம். | உடன்பட்டனர். என்டபல்யூஎஸ்&டிபீ குலாயிடலில் தாமதம் மற்றும் காணி சுவீகரிப்பில் தாமதம் போன்ற காரணங்களால் ஒப்பந்தத்திற்கு 175 நாட்கள் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | இலக்கிடப்பட்ட திகதிகளில் அவைகளை பூர்த்தி செய்ய வீதி நிர்மான நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கோட்டே – போம்பே வீதி | 70.12% | 98.3% | | | | |
| (இ) | ஒருகொடவத்தை – அம்பத்தளை வீதி. | 100% | 28.76% | | | | |
| (ஈ) | ஏனைய 4 வீதிகளின் 17.47 கி.மீ இன் நிர்மான வேலைகள். | 2019 இல் ஆரம்பிக்க எதிர்பார்க்கப் பட்டது. | பூச்சியம். | வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறிய படி | | மேற்கூறிய படி |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | --------------------------- | ---------- | ----------------------------- | --------------------- |
| (அ) | ரூபா 6,499.57 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 50 மில்லியன் ஒதுக்கீட்டில், 50.79 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 3,301 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 23.83 மில்லியன் மாத்திரமே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் காலாவதியாவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த கடன் காலம் வேலைகள் மற்றும் நிதிப்பயன்பாட்டில் காணப்பட்ட மந்தகதியான பௌதீக செயலாற்றல் காரணமாக 2020 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. | கடன் வசதி காலாவதியாவதற்கு முன்னர் மொத்த கடன் வசதிகளையும் பயன்படுத்துவதற்கான சாத்தியம். | உடன்பட்டபனர். | கடன் காலம் காலாவதியாவதற்கு முன்னர் ஒதுக்கீடுகளை பயன்படுத்த நிதித்திட்டம் கண்டிப்பாக மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டம் கொட்டாவ – தலகல வீதி, கோட்டே – போப்பே வீதி, ஒருகொடவத்த – அம்பத்தல வீதி போன்றவற்றின் பிரதான வரிசையிலிருந்து 2,850 மரங்களினை அகற்ற ரூபா 18.7 மில்லியன் ஏற்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்டமானது 3 இடங்களில் 254 மரங்களின் மீள்நடுகைக்காக 3 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே செய்யப்பட்டிருந்தது. | சுற்றுச்சூழலிற்கு பாதிப்பு. | கொள்வனவு செய்யப்பட்ட காணிகள் வீதி நிர்மானத்திற்கு வெறுமனே போதுமானதுடன் சில இடங்கள் மாத்திரமே மரம் நடுகைக்காக இருந்தது. | சுற்றுச்சூழலிற்கான பாதிப்பினை சரிசெய்ய மரங்களை மீள்நடுவதற்கு பெறுமதியான நிகழ்ச்சித்திட்டங்களை செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 காணி சுவிகரிப்பு மீதான விடயங்கள்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | --------------------------- | ------------- | -------------------------------- | ------------------------- |
| (அ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 5,599 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 4,695 மில்லியன் | இழப்பீட்டு கொடுப்பனவுகள் மீதான வட்டி மீது மேலதிக கிரயங்கள் | உடன்பட்டனர். காணி கொள்வனவிற்கான இழப்பீடுகளை போதிய தொகை முற்பணங்கள் ஒதுக்கீடு | காணி கொள்வனவு நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்பட்டு இலக்கிடப்பட்ட திகதிகளில் |

| | | | |
|---|---|---|---|
| தொகையான இழப்பீடுகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் 2,295 காணித்துண்டுகளிற்காக செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 05 காணித்துண்டுகள் மாத்திரமே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், ரூபா 25 மில்லியன் தொகையான வட்டி இழப்பீடுகள் மொத்தமாக ரூபா 1,379 மில்லியன் இழப்பீட்டு கொடுப்பனவின் தாமதம் காரணமாக மீளாய்வாண்டில் வெலுத்தப்பட்டிருந்ததுடன் இழப்பீட்டு கொடுப்பனவு சிட்டைகள் போதிய நிதிகளில்லாத காரணத்தால் செயற்திட்டத்தின் கைகளில் காணப்பட்டது. | ஏற்படுவதற்கான சாத்தியம். | செய்யப்பட்டிருக்கவில்லை. | பூரத்திசெய்ய செயலாற்றப்படல் வேண்டும் |
| (ஆ) கொட்டாவ – தலகள வீதியின் நிர்மான வேலைகள் 14.48 கி.மீ நீளமான வீதி நிர்மானத்திற்காக 2017 பெப்ரவரி 20 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தும், 5.44 கி.மீ நீளமான வீதி காணி கொள்வனவு நடவடிக்கைகளில் தாமதம் காரணமாக 2020 ஓகஸ்ட் 31 இல் உள்ளவாறு கூட ஒப்பந்ததாரரிற்கு கையளிக்கப்பட்டிருக்வில்லை. மேலும், ரூபா 56 மில்லியன் தொகையான நீடிப்பு செலவு காணி கொள்வனவின் தாமதம் காரணமாக கோட்டே – போப்பே வீதிக்காக ஒப்பந்ததாரரினால் பெறப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | உடன்பட்டனர். | செயற்திட்டத்தின் மேலதிக கிரயங்களை குறைக்க காணி கொள்வனவு நடவடிக்கைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |